# வழங்குநர் நடத்தை விதிகள்

# பொருளடக்கம்


அறிமுகம் 3

மனித உரிமைகள் மற்றும் பணிச் சூழல்கள் 4

- சமூகம் மற்றும் பங்குதாரர் ஈடுபாடு
- பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்கம்
- சங்கம் அமைக்கும் சுதந்திரம் மற்றும் கூட்டு பேரம்
- பணியிடத்தில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு
- பணியிடப் பாதுகாப்பு
- வேலைத் திணிப்பு மற்றும் ஆள் கடத்தல்
- குழந்தைத் தொழிலாளர்
- வேலை நேரங்கள், கூலிகள் மற்றும் பலன்கள்
- நெறிப்படி பணியமர்த்தல்
- சிறுபான்மையினர் மற்றும் உள்நாட்டினர் உரிமைகள்
- நில உரிமைகள் மற்றும் கட்டாய வெளியேற்றம்
- AAM வசம் கவலைகளைத் தெரிவித்தல்

சுற்றுச்சூழல் வளம் பேணுதல் 8

- கழிவு
- GHG உமிழ்வுகள் & எரிசக்தி
- குடிநீர்
- பொறுப்பான இரசாயன மேலாண்மை
- விலங்குகள் நல்வாழ்வு
- பன்முக உயிரியல், நிலப் பயன்பாடு மற்றும் காடழிப்பு
- நிர்வாக அமைப்புச் சான்றளிப்பு

பொறுப்பான வளமளிப்பு & உரிய கவனம் 11

தயாரிப்பு சீர்மை 12

வணிக நெறிமுறைகள் 13

- இலஞ்ச ஊழல்
- பரிசுகள் மற்றும் பொழுதுபோக்கு
- வணிகப் பதிவேடுகள்
- ஆதாய முரண்பாடுகள்
- நியாயமான வணிக நடைமுறைகள்
- ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் & பொருளாதார-த் தடைகள்

முரண்படும் தேவைகள் 15

சட்டம் மற்றும் இணக்க ஆதரவு மற்றும் கொள்கைகள் மற்றும் ஒப்புநோக்கலுக்கான இணைப்புகள் 16

# அறிமுகம்

AAM மனித உரிமைகள், சுற்றுச்சூழல் மேலாண்மை மற்றும் நெறிசார் நடத்தையில் மிக உயர்ந்த தரநிலைகளை மதிப்பதில் உறுதிகொண்டுள்ளது. எங்கள் வழங்குநர்களைக் கூட்டாளர்களாக மதிக்கவும் அவர்கள் வணிகம் செய்யும் முறையில் அக்கறை கொள்ளவும் செய்கிறோம். AAM வழங்குநர் நடத்தை விதிகள் என்பது மனித உரிமைகள், வணிக நெறிமுறைகள் மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றின் மீது மதிப்பு கொண்டிருப்பதை ஒருங்கிணைக்கக்கூடிய சட்டப்பூர்வ, தொழில்சார்ந்த மற்றும் பொறுப்பான நடைமுறைகளில் முன்னோக்குக் கூட்டுச் செயல்பாட்டை நமது வழங்குநர் கூட்டாளிகளுடன் உருவாக்கும் நமது இலட்சத்தின் விளைவாகும்.

நமது வழங்குநர் கூட்டாளிகள் மதிப்பீடு செய்யப்பட்டு பொருளாதார அளவுகோலுக்கும் அதிகமானவற்றின் பேரில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மனித உரிமைகளுடனான இணக்கம், தொழிலாளர் மற்றும் சமூகத் தரநிலைகள் மற்றும் அதேபோல பாகுபாட்டுக்கான எதிர்ப்பு மற்றும் ஊழல் எதிர்ப்புக் கொள்கைகள் ஆகியவற்றில் நமது வழங்குநர் கூட்டாளிகளின் நடைமுறைகளை நாங்கள் நெருக்கமாகவும் பார்க்கிறோம். பொறுப்பான வளமளிப்புக் கொள்கையில் AAM உறுதிகொண்டுள்ளது. நமது வழங்குநர்களுடைய நீடித்த தன்மையையும் நம்முடையதையும் மேலும் வளர்ப்பதற்காக நமது வழங்குநருடன் கூட்டிணைய நாம் தீர்மானிக்கிறோம். நமது வழங்குநர் கூட்டாளிகள் பொருந்தக்கூடிய சட்டங்களுக்கு முழுக்க இணங்கிச் செல்வதையும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் பெருநிறுவன ஆளுகைத் தரநிலைகளைப் (ESG தரநிலைகள்) பின்பற்றுவதை நாம் எதிர்பார்க்கிறோம். நமது வழங்குநர் கூட்டாளிகள் இந்த விதிகளைத் தெரிந்து பின்பற்ற வேண்டுமென்றும் அல்லது இந்த விதிகளில் விவரிக்கப்பட்டபடி AAM-ன் எதிர்பார்ப்புகளுக்கேற்ப ஒரு விதியை மற்றும்/அல்லது கொள்கைகளைப் பேணுவதையும் நாம் எதிர்பார்க்கிறோம். வழங்குநர்களும் இதேபோன்ற எதிர்பார்ப்புகளை அவர்களது சொந்த வழங்கல் சங்கிலித் தொடரில் ஏற்படுத்த வேண்டுமென்று AAM எதிர்பார்க்கிறது.

இந்த ஆவணத்தில் அமைக்கப்பட்ட தரநிலைகளை நீங்கள் முழுமையாக மீளாய்வு செய்யும்படி கேட்டுக்கொள்கிறோம்.





# மனித உரிமைகள் & பணிச் சூழல்கள்

தொழில் மற்றும் மனித உரிமைகள் மீதான ஐக்கிய நாடுகளின் வழிகாட்டும் கொள்கைகள் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் மசோதா மற்றும் பணியில் அடிப்படைக் கொள்கைகள் மற்றும் உரிமைகள் மீது சர்வதேச தொழிலாளர் அமைப்புகளின் பிரகடனம் ஆகியவற்றில் வெளிப்படுத்தப்பட்டவை உட்பட வணிக நிறுவனங்களுக்கான அதன் அடிப்படைக் கொள்கைகள் மனித உரிமைகள் தொடர்பான AAM-ன் விழுமியங்கள், கோட்பாடுகள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கான வழிகாட்டும் சட்டகங்களாக உள்ளன.

இந்தச் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளையொத்து வழங்குநர் கூட்டாளிகள் நடப்பதையும் எதிர்மறையான மனித உரிமைகள் தாக்கங்களைத் தடுக்க, தணிக்க மற்றும் சரிப்படுத்த பயனுள்ள நடவடிக்கைகளை எடுப்பதையும் AAM எதிர்பார்க்கிறது. வழங்குநர் கூட்டாளிகள் AAM-ன் மனித உரிமைகள் கொள்கை அல்லது அதற்கிணையான எதிர்பார்ப்புகளைப் பின்பற்றுவதுடன் தங்களது வழங்கல் சங்கிலி முழுவதும் அதைப் பின்பற்றச் செய்வதும் எதிர்பார்க்கப்படுகிறது.

## சமூகம் மற்றும் பங்குதாரர் ஈடுபாடு

தாங்கள் செயல்படும் ஒவ்வொரு நாட்டிலும் உள்ள உள்நாட்டினரின் கலாச்சாரங்கள் மற்றும் மரபுகளுக்கு மதிப்பளித்து வழங்குநர் கூட்டாளிகள் சமூகப் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. சமூகத்தின் நம்பிக்கையையும் ஆதரவையும் பெறுவதற்காக நேர்மையாகவும் நல்லெண்ணத்துடனும் செயல்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சமூகத்தை மேம்படுத்தவும் அங்கே வாழ்வோரின் நலனுக்காகவும் செயல்திட்டங்களையும் யுக்திகளையும் அமல்படுத்துவதற்கு உள்ளூர் சமூகங்களுடன் நெருக்கமாக இணைந்து செயல்படும்படியும் வழங்குநர் கூட்டாளிகளை AAM ஊக்குவிக்கிறது.

## பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்கம்

பன்முகத்தன்மையை மதிக்கவும் கொண்டாடவும் படக்கூடியதும் ஒவ்வொருவரும் தங்களது முழு ஆற்றலையும் எட்டுவதில் பங்களிப்பு தருவதற்கான உள்ளடக்கிய கலாச்சாரங்களை மேம்படுத்தவும் வளர்க்கவும் வழங்குநர் கூட்டாளிகளை AAM ஊக்குவிக்கிறது. வழங்குநர் கூட்டாளிகள் இனம், நிறம், மதம், வயது, பாலினம், பாலினச் சார்பு, பாலின அடையாளம், பிறந்த தேசம், ஊனம், வீரர் அந்தஸ்து, மரபியல் தகவல்கள், கர்ப்பம் அல்லது பிற காரணிகள் அடிப்படையில் பாகுபாடு மற்றும்/அல்லது துன்புறுத்தல் இல்லாத, உள்நாட்டுச் சட்டத்தால் பாதுகாக்கப்பட்டிருக்கக்கூடிய பணியிடங்களைப் பேணுவது எதிர்பார்க்கப்படுகிறது.

## சங்கம் அமைக்கும் சுதந்திரம் மற்றும் கூட்டு பேரம்

வழங்குநர் கூட்டாளிகள் தங்கள் பணியாளர்கள் பழிவாங்கல், அச்சுறுத்தல் அல்லது துன்புறுத்தல் பயமின்றி தொழிற்சங்கத்தில் சேர, உருவாக்க அல்லது சேராமலிருக்கும் உரிமைகளை மதிக்க வேண்டும். சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட சங்கப் பிரதிநிதிகளாக உள்ள பணியாளர்களுடன் வழங்குநர் கூட்டாளிகள் நன்னம்பிக்கையுடன் பேரம் பேசக் கடமைப்பட்டவர்கள்.



## பணியிடத்தில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு

பணியாளர்களைப் பாதுகாப்பதற்கான பாதுகாப்பு அமைப்புகளை உருவாக்கவும் காயங்களைக் குறைக்கவும் நீக்கவும் முன்னதாகவே செயல்பட வழங்குநர் கூட்டாளிகள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். ஆபத்தான சூழல்களை அடையாளம் காணவும் குறைக்கவும் அபாய மதிப்பீடுகளை வழங்குநர் கூட்டாளிகள் நடத்த வேண்டும். அனைத்துப் பணிகள் மற்றும் வேலைகளுக்குப் பாதுகாப்பான பணி நடைமுறைகளை அடையாளம் காணவும் தரநிலைப்படுத்தவும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். நேர்மறையான பாதுகாப்புக் கலாச்சாரத்தை வளர்க்க வழங்குநர் கூட்டாளிகள் பாதுகாப்பற்ற நடத்தைகளை அடையாளம் காண்பதிலும் திருத்துவதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

வழங்குநர் கூட்டாளிகள் விபத்துத்/ தடுப்பிலும் நிரந்தர சரிசெய்தல் நடவடிக்கையில் கவனம் செலுத்தக்கூடிய பாதுகாப்பு மேலாண்மை அமைப்பைக் கொண்டிருக்க வேண்டும். ISO 45001-ஐ பின்பற்றுவதை AAM ஊக்குவிக்கிறது. காணத்தக்க மேலாண்மை ஆதரவு, நடைமுறைக்கேற்ற பாதுகாப்புக் குழுக்கள், ஒரு முழுமையான தணிக்கை மற்றும் கண்காணிப்புச் செயல்முறையும் ஒரு நேர்மறையான கற்றல் சூழலும் இருப்பது என இவை அனைத்தும் ஒரு வலுவான பாதுகாப்புத் திட்டத்தைக் கட்டமைக்க உதவும்.

## பணியிடப் பாதுகாப்பு

பணியிடத்தில் நிகழ்வதிலிருந்து வன்முறைச் சம்பவங்களைத் தடுக்க நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் தங்கள் பணியாளர்களின் பத்திரம் பாதுகாப்புக்கு வழங்குநர் கூட்டாளிகள் முன்னுரிமையளிக்க வேண்டும். ஏதேனும் முறையற்ற மற்றும்/அல்லது சட்டத்துக்குப் புறம்பான நடவடிக்கை அல்லது நடத்தையில் ஈடுபடுவோருக்கு எதிராக விரைவான தீர்வு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

## கட்டாய வேலை மற்றும் ஆட்கடத்தல்

வழங்குநர் கூட்டாளிகள் ஆட்கடத்தலில் ஈடுபடவோ, கட்டாயப்படுத்தி, தன்னார்வமின்றி அல்லது கொத்தடிமையாக வேலை வாங்கக்கூடாது.  கட்டாயப்படுத்தி, தன்னார்வமின்றி அல்லது கொத்தடிமைகளைப் பயன்படுத்தும் நிறுவனங்களிடமிருந்து பொருட்களை அல்லது சேவைகளை வழங்குநர் கூட்டாளிகள் கொள்முதல் செய்யக்கூடாது.

சாத்தியமான மனித உரிமை முறைகேடுகளை அடையாளம் காண்பதற்கு உரிய நடைமுறைகளை வழங்குநர் கூட்டாளிகள் செயல்படுத்த வேண்டும். இதில் தள ஆய்வுகள் மற்றும் இணைப்பதில் உதவி (தடுப்புக்காவல் முகாம்களுடன் இணைந்து செயற்கைக்கோள் தொழிற்சாலைகளை நிறுவியது), வறுமை நீக்கும் திட்டங்கள் (தன்னார்வமில்லா வேலைத் திட்டங்களில் அமர்த்துதல்) மற்றும் தன்னார்வமற்ற உழைப்பு இடமாறுதலை ஏற்படுத்துவதற்காக வேளாண்நிலங்களை வலுக்கட்டாயமாகப் பறிமுதல் செய்தல் போன்ற வாய்ப்புள்ள அரசு தொழிலாளர் திட்டங்களை அடையாளம் காண்பதில் வழங்குநர் பயிற்சி.

## குழந்தைத் தொழிலாளர்

எந்த வடிவத்திலும் குழந்தைத் தொழிலாளர்களைச் சேர்ப்பது முழுமையாகத் தடைசெய்யப்படுகிறது. வழங்குநர் கூட்டாளிகள் உள்ளூர் ஒழுங்குமுறைகளுக்கு ஏற்ப பொருந்தக்கூடிய அனைத்துக் குறைந்தபட்ச உழைக்கும் வயதுச் சட்டங்களுக்கு இணங்க வேண்டும்.பொருந்தக்கூடிய குறைந்தபட்ச சட்டப்பூர்வ வயதுத் தேவையைப் பூர்த்திசெய்வோரை மட்டுமே பணியமர்த்த வேண்டும். அத்துடன், AAM வழங்குநர் கூட்டாளிகள்:

- வழங்குநர் கூட்டாளிகள் 15 வயதுக்குக் கீழேயுள்ளோரைப் பணியமர்த்துவதை அது உள்நாட்டுச் சட்டப்படி அனுமதிக்கப்பட்டிருந்தாலும் அதைத் தடுக்கும் வேளையில், தாங்கள் இயங்கக்கூடிய எந்தப் பிராந்தியத்திலும் உள்ள குறைந்தபட்ச உழைக்கும் வயதைப் பின்பற்ற வேண்டும். பங்கேற்பாளர்களுக்கு நன்கு பலனளிக்கக்கூடிய அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட பணிப் பயிற்சி அல்லது பணிப்பயிற்சித் திட்டங்கள் மட்டுமே இந்தத் தேவையில் உள்ள ஒரேயொரு விதிவிலக்கு ஆகும்.
- இரவுப் பணிகள், ஓவர்டைம் அல்லது ஆபத்தான வேலை உட்பட தங்களது ஆரோக்கியம் அல்லது பாதுகாப்பைச் சீர்குலைக்கும் வேலையைச் செய்வதிலிருந்து 18 வயதுக்குக் கீழேயுள்ளோரைத் தடுக்க வேண்டும்.
- கல்விக் கூட்டாளிகளுடன் தேவையான முனைப்புகளை மேற்கொண்டு பொறுப்புடன் மாணவப் பணியாளர்களைக் கையாள்வது, பொருத்தமான மாணவர் வேலைப் பதிவேடுகளைப் பேணுவது மற்றும் மாணவப் பணியாளர்களின் உரிமைகளைக் காப்பது.

## வேலை நேரங்கள், கூலிகள் மற்றும் பலன்கள்

ஊழியர் இழப்பீடு மற்றும் பணி நேரங்களை ஆளக்கூடிய பொருந்தக்கூடிய சம்பளம் மற்றும் மணிக்கணக்கு உழைப்புச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுடன் வழங்குநர் கூட்டாளிகள் இணங்க வேண்டும்.

## நெறிப்படி பணியமர்த்தல்

பணித்தன்மை குறித்து வரக்கூடிய பணியாளர்களைத் தவறாக வழிநடத்துவது அல்லது மோசடி செய்வது, பணியமர்த்தல் கட்டணம் செலுத்த பணியாளர்களிடம் கேட்பது மற்றும்/அல்லது பணியாளரின் கடவுச்சீட்டுகளையும் பிற அரசாங்க அடையாள ஆவணங்களையும் பறிமுதல் செய்வது, அழிப்பது, ஒளித்துவைப்பது மற்றும்/அல்லது அணுக மறுப்பது ஆகியவற்றை வழங்குநர் கூட்டாளிகள் செய்யக்கூடாது. பணியாளர்கள் தாங்கள் பணியமர்த்தப்பட்டதும் எழுத்துப்பூர்வ ஒப்பந்தம் அல்லது பணியமர்த்தல் அறிவிப்பினை அவர்கள் நன்கு புரிந்துகொள்ளக்கூடிய மொழியில் அவர்களது உரிமைகளையும் பொறுப்புக்களையும் உண்மையாகவும் தெளிவாகவும் விளக்கும் வகையில் பெறவேண்டும்.



## சிறுபான்மையினர் மற்றும் உள்நாட்டினரின் உரிமைகள்

பண்புடைய வாழ்க்கைச் சூழல்களுக்கான உள்ளூர்ச் சமூகங்களின் உரிமைகளை வழங்குநர்கள் மதிக்க வேண்டும்; கல்வி, வேலைவாய்ப்பு, சமூக நடவடிக்கைகள் மற்றும் அவர்கள் வாழும் நிலம் ஆகியவற்றின் மீது பாதிக்கப்படக்கூடிய குழுக்கள் இருப்பதற்கான கரிசனத்துடன் நடந்துகொள்ள வேண்டும்.

## நில உரிமைகள் மற்றும் கட்டாய வெளியேற்றம்

கையகப்படுத்துதலின்போது, மேம்பாடு அல்லது பிற நிலம், காடுகள் மற்றும் நீர்நிலைகள் பயன்பாடுகளில் கட்டாய வெளியேற்றத்தையும் நிலம், காடுகள் மற்றும் நீர்நிலைகளை இழக்கச் செய்வதை வழங்குநர்கள் தவிர்க்க வேண்டும்.

## AAM வசம் கவலைகளைத் தெரிவித்தல்

சட்டக்கட்டுப்பாடுகள் ஏதேனும் இருந்தால், ஏதேனும் முறையற்ற வணிக நடைமுறை அல்லது நடத்தைக்கான சாத்தியம் அல்லது இந்த நடத்தையால் ஆளப்படுவதில் ஏதேனும் சிக்கல்களை வழங்குநர் கூட்டாளிகள் உடனடியாக AAM-க்கு தெரிவிக்கவும் அதைத் தொடர்ந்த விசாரணைகளில் AAM உடன் ஒத்துழைக்கவும் வேண்டும். அத்தகு கவலையைத் தெரிவிக்கும் எவருக்கும் எதிராகப் பழிவாங்கும் நடவடிக்கையை வழங்குநர் கூட்டாளிகள் மேற்கொள்ளக்கூடாது. ஒரு கவலையைத் தெரிவிக்க வழங்குநர் கூட்டாளிகள் எப்போதும் நேரடியாகத் தங்களது AAM உலகளாவிய கொள்முதல் பிரதிநிதியிடம் பேசலாம். அத்துடன், AAM-ன் பணியாளர்கள், வழங்குநர் கூட்டாளிகள், வாடிக்கையாளர்கள் மற்றும் பிறர் வணிக நெறிமுறைகள் தொலைபேசி எண்ணில் AAM-ஐப் பாதிக்கக்கூடிய தவறான நடத்தைகுறித்துப் புகாரளிக்கலாம். AAM-ன் கட்டணமில்லா வணிக நெறிமுறை உதவி எண்ணை அழைத்து, பயிற்சி பெற்ற AAM அல்லாத பணியாளர்களிடம் 24 மணிநேரமும், வாரத்தின் ஏழு நாட்களும் புகாரளிக்கலாம் அல்லது எங்கள் இணைய அடிப்படையிலான தெரிவித்தல் அமைப்பு மூலம் புகாரளிக்கலாம். AAM-ன் அமைப்புகள் அனுமதிக்கப்பட்ட இடத்தில் அநாமதேயமாகத் தெரிவிப்பதை அனுமதிக்கின்றன.

AAM-ன் வணிக நெறிமுறைகள் தொலைபேசி எண் தொடர்பு விபரங்களை அணுக பின்வரும் இணைப்புகளைப் பயன்படுத்தவும்:
ஐரோப்பாவுக்கு வெளியே: https://aam.alertline.com
ஐரோப்பா: https://aameu.alertline.com



# சுற்றுச்சூழல் வளம் பேணுதல்

அனைத்து AAM வழங்கல் கூட்டாளிகளும் AAM-ன் அதேயளவு சுற்றுச்சூழல் வளம் பேணுதல் மற்றும் பொறுப்புணர்வுக்கான உறுதிப்பாட்டைக் காட்ட வேண்டும். இதில் உண்மையாக வளம்பேணுவதில் செயல்படுவதில் இணக்கத்தையும் தாண்டிச் செயல்படுவது அடங்கும்.


AAM மற்றும், நமது வழங்குநர் கூட்டாளிகளுக்கு நமது சக பணியாளர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் நாம் செயல்படும் சமூகங்களுக்கு மேலும் நிலையான எதிர்காலத்தை உறுதிசெய்வதில் நமது சுற்றுச்சூழல் தாக்கத்தைக் குறைக்கும் கடப்பாடு உள்ளது. அனைத்து வழங்குநர் கூட்டாளிகளும் பொருந்தக்கூடிய சுற்றுச்சூழல் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளைத் தெரிந்துகொண்டு அதன்படி நடக்கவேண்டுமென்றும் தங்களது சுற்றுச்சூழல் தாக்கங்களைப் பொறுப்புடன் கையாளவும் எதிர்பார்க்கப்படுகிறது. தேவையான அனுமதிகள் மற்றும் உரிமங்கள் பெறப்பட்டு அவற்றின் தேவைகள் பின்பற்றப்பட வேண்டும். சுற்றுச்சூழல் வளம் பேணுகை தொடர்பான இலக்குகளை, குறிப்பாகப் பசுங்குடில் வாயு உமிழ்வுகளில் AAM ஏற்படுத்தியுள்ளது. இதற்கு நமது வழங்குநர் கூட்டாளிகளுடன் ஒத்துழைப்பும் கூட்டுச் செயல்பாடும் தேவை. உமிழ்வு குறைப்பு இலக்குகள் மற்றும் நோக்கங்களின் நோக்கெல்லை 1, 2 மற்றும் 3 மீதான மேலும் விரிவான தகவல்களுக்கு AAM-ன் சமீபத்திய வருடாந்திர வளம்பேணல் அறிக்கையைப் பார்க்கவும்.

வளம் பெறும் முடிவுகளில் காரணிகளாகச் சுற்றுச்சூழல் வளம் பேணல் எதிர்பார்ப்புகளையும் தொடர்ந்த செயல்பாட்டில் முன்னேற்றங்களையும் AAM கவனத்தில் கொள்கிறது.

## கழிவு

சாத்தியமான இடங்களில் மறுசுழற்சி மற்றும் மறுபயன்பாடு வாயிலாக வழங்குநர் கூட்டாளிகள் தங்கள் சொந்த சூழல் தாக்கங்களைக் குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறார்கள். கூடுதலாக, அவர்கள் ஒழுங்குபடுத்தப்பட்ட வள மேலாண்மையை வலியுறுத்தும் கொள்கைகளை அமல்படுத்துவதுடன் சுழற்சிப் பொருளாதாரக் கருத்தாக்கத்தை ஊக்குவிக்கவேண்டும். வழங்குநர் கூட்டாளிகள் தங்கள் விலைக்குறிப்புகளில், மறுசுழற்சி செய்த பொருட்கள் தேவையான விபரக்குறிப்புகளைப் பூர்த்தி செய்யும்போது மறுசுழற்சித் தெரிவினை வழங்க வேண்டும்.

| | |
|---|---|
| நோக்கெல்லை 1, 2 & 3 உமிழ்வுகள் | எரிசக்தி |
| குடிநீர் | கழிவு |



## GHG உமிழ்வுகள் & எரிசக்தி

AAM-ன் உமிழ்வில்லா நிலையை எட்டும் இலக்கினை ஆதரிப்பதற்கு, வழங்குநர் கூட்டாளிகள் அறிவியல் அடிப்படையிலான இலக்குகளை (SBT) அமைக்க உறுதிபூணவும், அறிவியல் அடிப்படையிலான இலக்குகளுக்கான முனைப்புகளினால் (SBTi) ஏற்கப்பட்ட ஒன்றை எட்டவும் எதிர்பார்க்கப்படுகிறது. CDP வாயிலாக சுற்றுச்சூழல் தாக்கத்தைக் குறைப்பதற்கு முயற்சிகளை வெளிப்படுத்துவதன் மூலம் வழங்குநர் கூட்டாளிகள் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வைத் தழுவுவதற்கு AAM ஊக்குவிக்கிறது. எரிசக்திப் பயன்பாட்டைக் குறைக்கவும், புதுப்பிக்க இயலா வளங்களுக்கு மாற்றாக சாத்தியமான இடங்களில் மாற்றாக புதுப்பிக்கத்தக்க வளங்களைப் பயன்படுத்தவும் வழங்குநர் கூட்டாளிகள் எதிர்பார்க்கப்படுகிறார்கள். GHG உமிழ்வுகள் தொடர்பான இந்த முனைப்புகளை ஆதரிப்பதற்கு வழங்குநர் கூட்டாளிகளிடம் திட்டங்கள் இருக்க வேண்டுமெனவும் தங்கள் செயல்முறைகளில் எரிசக்தி நுகர்வை முழுமையாகக் குறைக்கச் செயல்படுவதும் எதிர்பார்க்கப்படுகிறது. உமிழ்வுகளின் அளவைக் கட்டுப்படுத்தும் தேவையான அனுமதிகள் பெறப்பட்டு அதன்படி ஒழுகப்பட்டு உமிழ்வுக் கட்டுப்பாடுகளைக் கண்காணிக்க அமைப்பும் இருக்க வேண்டும். உமிழ்வுக் குறைப்பு இலக்குகள் மற்றும் நோக்கங்களின் நோக்கெல்லை 1, 2 மற்றும் 3 மீதான மேலும் விரிவான தகவல்களுக்கு AAM-ன் சமீபத்திய வருடாந்திர வளம்பேணல் அறிக்கையைப் பார்க்கவும்.

## நீர்

அனைத்து வளங்களிலிருந்தும் நீரைப் பாதுகாக்கவும் நீர்ப் பயன்பாட்டைக் குறைக்கவும் வேண்டும் என்று வழங்குநர் கூட்டாளிகள் எதிர்பார்க்கப்படுகிறார்கள். நீரை மறுசுழற்சிக்கும் மறு பயன்பாட்டுக்கும் பயன்படுத்துவது வழங்குநர் கூட்டாளிகள் எடுக்கக்கூடிய நேர்மறையான நடவடிக்கைகள் ஆகும்.

பருவநிலை மாற்றம் மற்றும் நீர்ப் பாதுகாப்பு தொடர்பாகச் சுற்றுச்சூழல் அபாய மதிப்பீடுகளை நடத்துவதற்கும் இந்த ஆய்வுகளின் முடிவுகளை AAM வசம் வழங்குவதற்கும் வழங்குநர் கூட்டாளிகளை AAM மிகவும் ஊக்குவிக்கிறது. இதனால் நாம் இந்தப் பிரச்சினைகளில் நமது மதிப்புச் சங்கிலியை மதிப்பிட முடியும்.

## பொறுப்பான இரசாயன மேலாண்மை

வழங்குநர் கூட்டாளிகள் உற்பத்திச் செயல்பாடுகளிலும் முடிவடைந்த பொருட்களிலும் ஒழுங்குமுறைக்கு இணங்குவதை உறுதிசெய்ய தடைசெய்யப்பட்ட பொருட்களைப் பயன்படுத்துவதை அடையாளம் காண, குறைக்க அல்லது நீக்க வேண்டும். செயலாக்கங்கள் மற்றும் முடிவடைந்த பொருட்களில் தடைசெய்யப்பட்ட பொருட்களின் பயன்பாடு குறித்து வழங்குநர் கூட்டாளிகள் விழிப்புடன் இருக்கவும் தயாரிப்பையும் சுற்றுச்சூழல் பராமரிப்பையும் பேணுவதற்குப் பொருத்தமான மாற்றுகளைச் செயலூக்கத்துடன் ஆராய வேண்டும்.

## விலங்கு நல்வாழ்வு

விலங்கு ஆரோக்கியத்துக்கான (OIE) உலக நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்ட ஐந்து விலங்கு சுதந்திரங்களை வழங்குநர்கள் மதிக்க வேண்டும். ஒரு தானியங்கி தயாரிப்பில் ஒற்றை நோக்கத்துக்காக எந்த விலங்கும் வளர்க்கப்படவும் கொல்லப்படவும் கூடாது.

ஆராய்ச்சி நோக்கங்களுக்காக அல்லது நமது தயாரிப்புகள் மேம்பாட்டில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆராய்ச்சி நோக்கங்களுக்காக விலங்குகள் பரிசோதனைப் பயன்பாட்டை AAM நடத்தவோ நடத்தும்படி சொல்லவோ இல்லை. தனது ஆராய்ச்சி அல்லது மேம்பாட்டில் விலங்குகளிடம் சோதிக்கப்பட்டவை இருப்பின் வழங்குநர் கூட்டாளிகள் எந்த மூலப் பொருட்களையும், உட்கூறுகள், பாகங்கள் அல்லது பொருத்துகளை AAM-க்கு வழங்கமாட்டார்கள்.

## பன்முக உயிரியல், நிலப் பயன்பாடு மற்றும் காடழிப்பு

தங்கள் செயல்பாடுகளால் பாதிக்கப்பட்ட சூழல் அமைப்புகளைக் குறிப்பாக முக்கிய பன்முக உயிரியல் பகுதிகளை வழங்குநர்கள் காக்க வேண்டும். சர்வதேச பன்முக உயிரியல் ஒழுங்குமுறைகளுக்கு இணங்க பல்லுயிரியல் மீதான IUCN தீர்வுகள் மற்றும் பரிந்துரைகள் உட்பட சட்டத்துக்குப் புறம்பாகக் காடழிப்புகளைத் தவிர்க்க வேண்டும். அனைத்து வழங்குநர்களும் பொருந்தக்கூடிய சுற்றுச்சூழல் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளைத் தெரிந்து அதன்படி நடக்கவும் தங்கள் சுற்றுச்சூழல் தாக்கங்களையும் பரிமாணங்களையும் பொறுப்புடன் கையாள வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறார்கள். தேவையான அனுமதிகள் மற்றும் உரிமங்கள் பெறப்பட்டு அவற்றின் தேவைகள் பின்பற்றப்பட வேண்டும். வழங்குநர்கள் மண் அரிப்பைத் தடுக்கவும், ஊட்டச்சத்து தரம் குறைதல், சரிவு மற்றும் மாசுபாட்டைத் தடுப்பதற்கு மண் தரத்தில் தங்களது தாக்கத்தைத் தொடர்ந்து கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் வேண்டும்.

## நிர்வாக அமைப்புச் சான்றளிப்பு

தற்போது, தனது வழங்குநர் கூட்டாளிகள் ISO14001 அல்லது ISO50001 சான்றளிப்பை நாடுவதற்கு அல்லது பெறுவதற்கு AAM தேவை ஏற்படுத்தவில்லை எனினும் சுற்றுச்சூழல் மேலாண்மை அமைப்பினை அமல்படுத்த மிகவும் ஊக்குவிக்கிறது. கூடுதலாக, CDP போன்ற தளங்களில் தன்னார்வ பொது வெளிப்படுத்துவதை ஒரு நிறுவனத்தின் பொறுப்புடைமையில் நேர்மறை அம்சமாக AAM காண்கிறது. REACH மற்றும் உலகளாவிய ஒத்திசைந்த அமைப்பு போன்ற குறிப்பிட்ட சர்வதேச முனைப்புகளை AAM ஆதரிக்கிறது. அதன் வழங்குநர் கூட்டாளிகள் இவற்றையும் பிற சர்வதேசத் தேவைகளையும் புரிந்துகொண்டு இணங்கி நடக்க வேண்டும். அனைத்து சுற்றுச்சூழல் செயல்திட்டங்களின் பயனுறுதன்மையை மதிப்பிடுவதும் இலக்குகளை எட்டுவதற்குச் சிறந்த நடைமுறைகள் ஏற்படுத்தப்படுவதையும் மாற்றப்படுவதையும் செய்வது வழங்குநரின் பொறுப்பாகும்.



# பொறுப்பான வளமளிப்பு & உரிய கவனம்

வழங்குநர் கூட்டாளிகள் தங்கள் தயாரிப்புகளில் பயன்படுத்தப்படும் கச்சாப்பொருட்களையும் தாதுக்களையும் வழங்கல் சங்கிலியை தடம்காண்பதையும் வெளிப்படைத்தன்மையையும் வளர்க்கக்கூடிய ஒரு மேலாண்மை அமைப்பை உருவாக்குவதன் மூலமும் முரண்பாடுகளால் பாதிப்புற்ற மற்றும் அதிக அபாயமான பகுதிகளிலிருந்து தாதுக்களின் வழங்கல் சங்கிலிகளைப் பொறுப்புடன் எடுப்பதற்கு OECD உரிய முயற்சிகளுக்கான வழிகாட்டுதலுக்கேற்ப உரிய முனைப்புடன் செயல்பட்டுப் பொறுப்புடன் வழங்கவேண்டும்.

எல்லைக்குள் உள்ள வழங்கல் கூட்டாளிகள் AAM-ன் தாதுக்கள் முரண்பாட்டுக் கொள்கைக்கும் வருடாந்திர முரண்படும் தாதுக்கள் அறிவிப்புத் தேவைகளுக்கும் இணங்குவது அவசியம். இதில் AAM வழங்குநர் கூட்டாளிகள் தங்கள் சொந்த வழங்கல் அடுக்குகளை சர்வே செய்வது, AAM-ன் வருடாந்திர முரண்பாட்டுத் தாதுக்களின் சர்வேக்களுக்கு எதிர்வினையாற்றுவது, ஒரு முழுமையான துல்லியமான உருக்காலை பட்டியலை வழங்குவது மற்றும் AAM-க்கு வழங்கக்கூடிய உட்கூறுகள் அல்லது பொருத்துகளின் செயல்பாடு அல்லது தயாரிப்புக்கு அனைத்து டின், டாண்டலம், டங்க்ஸ்டன் மற்றும் தங்கம் (3TG) ஆகியவற்றுக்குச் சுரங்கங்களின் இருப்பிடத்தைத் தெரிவிக்கும் அவசியம் ஆகியவை அடங்கும்.



# தயாரிப்பு சீர்மை

பாதுகாப்பான உயர்தரத் தயாரிப்புகளையும் சேவைகளையும் வழங்க AAM உறுதிகொண்டுள்ளது. நமது வழங்குநர் கூட்டாளிகளும் இந்த உறுதிப்பாட்டைப் பூர்த்தி செய்வதன் ஒருங்கிணைந்த பகுதியாவர். வழங்குநர் கூட்டாளிகள் உயர்தர, பாதுகாப்பான மற்றும் பயனுள்ள பொருட்களையும் சேவைகளையும் பொருந்தக்கூடிய வாடிக்கையாளர் விபரக்குறிப்புகள், துறைசார் தரநிலைகள் மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகளுக்கு முழுமையாக இணங்கி வழங்கவேண்டும். வழங்குநர் கூட்டாளிகள் மொத்தமாக அல்லது பகுதியளவு வடிவமைப்புக்குப் பொறுப்புள்ள இடத்திலும் வடிவமைப்பு நடைமுறையிலும் வெளியீடுகளிலும் தயாரிப்பு நடைமுறைகளில் பொருத்தமான அபாய மதிப்பீடு மற்றும் தணிப்பு நுட்பங்கள் பிரயோகிக்க வேண்டுமென AAM எதிர்பார்க்கிறது. உட்பொதிந்த மென்பொருளை ஈடுபடுத்துவது அல்லது ஒருமுனையிலிருந்து மறுமுனை பயன்பாட்டுச் செயலிகளைப் பயன்படுத்துவதிலும் ஏதேனும் ஏற்ற பாதுகாப்பு இலக்குகள், தேவைகள் மற்றும்/அல்லது சட்டங்களின்படிச் செயல்பட வழங்குநர் கூட்டாளிகளின் ஒத்துழைப்பும் ஆதரவும் தேவை. வழங்குநர் கூட்டாளிகள் வழங்கும் தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் தரத்தையும் பாதுகாப்பையும், பொருந்துமிடத்தில் உருவாக்கச் செயல்பாட்டின்போது உட்பட AAM கவனமாகக் கண்காணிக்கும். மேலும், வழங்குநர் கூட்டாளிகளின் தயாரிப்புகளிலும் சேவைகளிலும் பழுதான தன்மைக்கு அவர்கள் பொறுப்பேற்க வேண்டும். தயாரிப்பின் தரம் மற்றும் பாதுகாப்பு என்று வரும்போது வழங்குநர் கூட்டாளிகள் முன்கணிப்புடன் இருப்பதை AAM எதிர்பார்க்கிறது. தரம் அல்லது பாதுகாப்பு தொடர்பான பிரச்சினையை ஏற்படுத்தக்கூடிய தரவைத் தவறாகச் சித்தரிப்பது அல்லது மறைப்பதை ஒருபோதும் செய்யக்கூடாது. வழங்கப்படும் தயாரிப்புகள் அல்லது சேவைகள் குறித்து பாதுகாப்பு குறித்த கேள்வி எழுந்தால் ஒவ்வொரு AAM வழங்குநரும் உடனடியாக AAM வசம் தெரிவிக்கும் கடப்பாடு உள்ளது.



# வணிக நெறிமுறைகள்

## இலஞ்ச ஊழல்

ஒரு வணிகத்தைப் பெறுவதற்கு அல்லது தக்கவைப்பதற்கு அல்லது முறையற்ற நன்மையைப் பெறுவதற்குத் தரப்படும் ஏதேனும் இலஞ்சம், கையூட்டு அல்லது பிற ஊழல் நடவடிக்கைகளைத் தடைசெய்யும் ஊழல் எதிர்ப்புச் சட்டங்களுக்கு AAM இணங்குகிறது. AAM வணிகம் செய்யும் பல நாடுகளில் இலஞ்சத்திற்கு எதிராகக் குறிப்பிட்ட சட்டங்கள் உள்ளன. அமெரிக்க நாட்டின் வெளிநாட்டு ஊழல் நடைமுறைகள் சட்டம் (The United States Foreign Corrupt Practices Act), இங்கிலாந்து இலஞ்சச் சட்டம் (UK Bribery Act), பிரேசிலியன் தூய நிறுவனங்கள் சட்டம் (Brazilian Clean Companies Act) மற்றும் இந்திய ஊழல் தடுப்புச் சட்டம் (Indian Prevention of Corruption Act) போன்ற சட்டங்கள் இதற்கு முக்கிய உதாரணங்கள் ஆகும். அனைத்து வழங்குநர் கூட்டாளிகளும் AAM உடன் வணிகம் செய்யும்போது அல்லது அதன் சார்பாகச் செயல்படும்போது பொருந்தக்கூடிய ஊழல் எதிர்ப்புச் சட்டங்களுக்கு இணங்க வேண்டும். குறிப்பாக, வணிகத்தைப் பெறுவதற்காக அல்லது வேறு ஏதேனும் முறையற்ற நன்மைகளைப் பெறுவதற்கு அல்லது வணிகத்தைத் தக்கவைப்பதற்கு, வழங்குநர் கூட்டாளிகள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, AAM பணியாளர்கள், பொது அதிகாரிகள் அல்லது பிற தனியார் அல்லது பொதுப் பிரதிநிதிகளிடம் இருந்து நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்த விதமான இலஞ்சம், சட்டவிரோதமான பணம் அல்லது பிற ஊழல் பணம் பெறுவது அல்லது வழங்குவது தடைசெய்யப்பட்டுள்ளது.

## பரிசுகள் மற்றும் பொழுதுபோக்கு

வணிக அமைப்பில் பொதுவாக உள்ள சிறிய பரிசுகள் அல்லது பெயரளவு வணிகப் பொழுதுபோக்கு வடிவிலான விருந்தோம்பலை AAM அங்கீகரிக்கிறது. எனினும் இந்தப் பரிசுகள் மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் பணியாளரின் வணிக முடிவுகளைப் பாதிக்காமலிருப்பது அல்லது முடிவு பாதிக்கப்படுமென்ற தோற்றத்தைத் தராமலிருப்பது முக்கியம். AAM உடன் வணிகம் செய்கையில் அல்லது அதன் சார்பாகச் செயல்படுகையில் வழங்குநர் கூட்டாளிகள் நியாயமான விருந்தோம்பலை வழங்குவதில் அல்லது ஏற்பதில் மட்டுறுத்தலையும் விவேகத்தையும் கடைப்பிடிக்க வேண்டும்.

வணிகம் அல்லது அரசாங்க முடிவுகள் அல்லது செயல்களில் செல்வாக்கு செலுத்தும் நோக்கம் கொண்டதாகவோ அல்லது உணரக்கூடியதாகவோ இருந்தால், எந்தவொரு பரிசையும் வழங்குநர் கூட்டாளிகள் கொடுக்கவோ அல்லது ஏற்கவோ கூடாது.

## வணிகப் பதிவேடுகள்

வழங்குநர் கூட்டாளிகள் தங்கள் வணிக நடவடிக்கைகள், கட்டமைப்பு, நிதிச் சூழ்நிலை மற்றும் செயல்திறன் குறித்த தகவல்களைப் பொருந்தக்கூடிய சட்ட ஒழுங்குமுறைகளுக்கேற்பவும் துறைசார் வணிகத் தரநிலைகளுக்கு ஏற்பவும் துல்லியமாகப் பதிவுசெய்து வெளிப்படுத்த வேண்டும்.

## ஆதாய முரண்பாடுகள்

வணிக உறவுகளில் எதிர்மறையான செல்வாக்கினைச் செலுத்தும் அனைத்து ஆதாய முரண்பாடுகளையும் வழங்குநர் கூட்டாளிகள் தவிர்ப்பது எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் ஏற்படக்கூடிய ஆதாய முரண்பாடுகளைக் கையாள்வதில் உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்பைச் செயல்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது. சாத்தியமான ஆதாய முரண்பாடு தொடர்பாகக் கேள்வி எழுந்தால், அந்தப் பிரச்சினை உடனடியாக உங்கள் AAM உலகளாவிய கொள்முதல் பிரதிநிதியிடம் வழிகாட்டுதலுக்காக எடுத்துச் செல்லப்பட வேண்டும்.





## நியாயமான வணிக நடைமுறைகள்

AAM நியாயமான நெறிசார் வணிக நடைமுறைகளுக்கு உறுதிபூண்டுள்ளது. அதே உறுதிப்பாட்டினை வழங்குநர் கூட்டாளிகளிடமும் எதிர்பார்க்கிறது.

தேசிய மற்றும் சர்வதேச போட்டிச் சட்டங்களுக்கேற்ப வழங்குநர் கூட்டாளிகள் செயல்பட வேண்டும். விலை முன் நிர்ணயத்தில், சந்தை அல்லது வாடிக்கையாளர் ஒதுக்கீட்டில், சந்தைப் பகிர்வு அல்லது ஏலத்தில் செயற்கையான ஏற்ற இறக்கத்தைச் செய்வதில் பங்கேற்கக்கூடாது.

வழங்குநர் கூட்டாளிகள் அறிவுசார் சொத்துரிமைகளை மதிக்கவும் இரகசியத் தகவல்களைப் பாதுகாக்கவும் வேண்டும். அனைத்து AAM தகவல்களையும், மின் தரவுகள் மற்றும் அறிவுசார் சொத்து அல்லது AAM தொழில்நுட்பங்களை முறையான காப்பரண்களுடன் வழங்குநர் கூட்டாளிகள் பாதுகாக்க வேண்டும். இரகசியத் தகவல்கள் ஏதேனும் பரிமாறுவது AAM-ன் அறிவுசார் சொத்துரிமையைப் பத்திரமாகப் பாதுகாக்கும் வகையில் நிறைவேற்றப்பட்டு அனைத்துத் தொடர்புடைய ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டங்களுக்கு இணங்க நடக்க வேண்டும். வழங்குநர் கூட்டாளிகள் ஒப்பந்த உடன்படிக்கையால் அங்கீகரிக்கப்பட்டதன் அடிப்படையில் மட்டுமே AAM-ன் இரகசியத் தகவல்களைப் பெறக்கூடும். அவர்கள் இரகசியத் தகவல்களை வெளிப்படுத்தாமலிருப்பது, ஒப்பந்தப்படி அனுமதிக்கப்பட்டதைத் தவிர தகவல்களைப் பயன்படுத்தாமல் இருப்பது, தகவல்களைத் தவறாகப் பயன்படுத்துவது அல்லது அதிகாரப்பூர்வமற்று வெளிப்படுத்துவதிலிருந்து காப்பது ஆகிய கடப்பாட்டுக்கு இணங்க வேண்டும். அவ்வப்போது ஒரு வழங்குநர் AAM வாடிக்கையாளர் ஆவணத்தைப் பார்வையிடும் தேவை எழலாம். இந்தச் சூழல் எழுந்தால், வழங்குநர் AAM இரகசியத் தகவல்களின் இரகசியத் தன்மை அளவுக்கே அனைத்துத் தகவல்களையும் வைத்திருக்க வேண்டும்.

வழங்குநர் கூட்டாளிகள் தங்கள் தயாரிப்பையும் சேவையையும் தடங்கலின்றி விளக்குவதும் AAM அளிக்கும் ஒப்பந்த விதிகளை மதிப்பதும் எதிர்பார்க்கப்படுகிறது.

## ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் & பொருளாதாரத் தடைகள்

வழங்குநர் கூட்டாளிகள் அனைத்து பொருந்தக்கூடிய ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டங்களுக்கும் தடை செய்யப்பட்ட நாடுகள், அமைப்புகள், நபர்கள் அல்லது தொழில்துறைகளுடன் வணிக உறவுகளைத் தடுக்கும் அல்லது கட்டுப்படுத்தும் சட்டங்களுக்கும் இணங்குவது எதிர்பார்க்கப்படுகிறது.

தடைகள், ஏற்றுமதி கட்டுப்பாடுகள் மற்றும் புறக்கணிப்பு எதிர்ப்புத் தேவைகளுக்கு இணங்க உரிய நடவடிக்கைகளை வழங்குநர் கூட்டாளிகள் மேற்கொள்ள வேண்டும். சுங்க நடவடிக்கைகள் தொடர்பாகத் துல்லியமான முழுமையான பதிவேடுகளைப் பேணுவதும் வழங்குநர் கூட்டாளிகளிடம் எதிர்பார்க்கப்படுகிறது.

# முரண்படும் தேவைகள்

AAM உலகளாவிய வழங்குநர் தேவைகள் கையேட்டின் தேவைகளுடன் அல்லது AAM வழங்குநர் கூட்டாளிகளின் ஏதேனும் பிற தேவைப்பாடுகளில் முரண்பாடு காரணமாக ஏதேனும் தேவை ஏற்படும்போது (எ.கா., உங்களுக்கும் AAM-க்கும் இடையில் ஏதேனும் ஒப்பந்தப்படி) AAM உடனான உங்கள் ஒப்பந்தத் தேவைகளே மேலோங்கும்.

# சட்டம் மற்றும் இணக்க ஆதரவு

இந்த வழங்குநர் நடத்தை விதிகளின் தேவைகளில் உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், நீங்கள் AAM-ல் உங்கள் முதன்மை கொள்முதல் தொடர்பு நபரைத் தொடர்புகொள்ள வேண்டும். AAM-ன் சட்டத்துறைக்கும் உங்கள் கேள்விகளை நீங்கள் அனுப்பலாம்: Legal.Department@aam.com.

- AAM Human Rights Policy
- AAM வணிக நெறிகள் தொலைபேசித் தொடர்புத் தகவல்கள்
- AAM முரண்படும் தாதுக்கள் கொள்கை
- AAM-ல் வளம் பேணுகை
- AAM வழங்குநர் வளம் பேணுகை
- வணிகம் மற்றும் மனித உரிமைகளில் UN வழிகாட்டும் கொள்கைகள்
- சர்வதேச மனித உரிமைகள் மசோதா
- பணியில் அடிப்படைக் கொள்கைகள் மற்றும் உரிமைகள் மீது ILO பிரகடனம்
- ILO குறைந்தபட்ச வயது வழக்காறு எண் 138
- ILO குழந்தைத் தொழிலாளர்களின் மிக மோசமான வடிவங்கள் வழக்காறு எண் 182
- விலங்கு நலத்துக்கான உலக அமைப்பு (OIE)
- பல்லுயிரியலில் IUCN தீர்மானங்கள் மற்றும் பரிந்துரைகள்